ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1561 - 2008 අගෝස්තු 01 වැනි සිකුරාදා - 2008.08.01

*1561 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 798 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 799 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்****. வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஓகத்து 08 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, யூலை 25 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை மதுவரி திணைக்களம்

மோட்டார் வாகன மதுவரி சாரதி வகுப்பு II பதவி

இலங்கை மதுவரி திணைக்களத்தில் மோட்டார் வாகன மதுவரி சாரதி வகுப்பு II பதவிகளுக்காக பின்வரும் தகமைகளையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற் கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2008.08.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரி திணைக்களம், இல. 28, ஸ்ரெப்பிள் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் பகுதியில்/ "மோட்டார் வாகன மதுவரி சாரதி பதவி" என எழுதப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவடையும் திகதிக்கு பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை சம்பந்தமாக அறிவிக்கப்படமாட்டாது.

3. **மாதாந்த சம்பள முறை :-**

வகுப்பு II - ரூபா 13,580 - 10 x 120 - ரூபா 14,780

இச்சம்பள கொடுப்பனவில் நான்காவது (4 ஆவது) படிமுறைக்கு முன் வினைத்திறமைக்கான தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.)

4. **வயது எல்லை.-** வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவு திகதியன்று, 18 வயதிற்கு மேற்பட்டவர்களும், 45 வயதிற்கு மேற்படாதவர்களும். (தற்போது அரச/மாகாண சபைகளில் சேவையாற்றுபவர்களுக்கு இந்த கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. **கல்வியும் வேறு தகைமைகளும் :-**

(i) இலங்கை பிரஜைகள்.
(ii) கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலைகளில் குறைந்தது. 8 ஆம் தரம்/ 9 ஆம் தரம் சித்தியடைந்தவர்கள்.
(iii) தற்போதுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதின்பின் கடந்த மூன்று (3) வருடகாலத்தில் சிறந்த சேவையை ஆற்றியிருத்தல் வேண்டும் (சான்றிதழை இணைக்கவும்)
(iv) விண்ணப்பதாரர் சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரரின் நன்நடத்தை குறித்து தேசிய தகவல் மத்திய நிலையம்/பிரதேச பொலிஸ்/ மதுவரி நிலையங்கள் என்பவற்றிலிருந்து அறிக்கை பெறப்படும்).
(v) பகலிலும் இரவிலும் சேவை செய்யக்கூடிய கண்பார்வையுடையவராகவும் இலங்கையின் எப்பாகத்தி லும் சிறந்த சேவையாற்றக் கூடிய உடல் ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.)
(vi) ஆகக் குறைந்தது 5' 4" உயரமும் சுவாசம் வெளிவிட்ட நிலையில் 32" அளவுக்கு குறையாத மார்பு சுற்றளவு இருத்தல் வேண்டும்.
(vii) போக்குவரத்து சட்டங்கள்/ஒழுங்குவிதிகளில் நல்ல திறமை யான அறிவும் தொழில்நுட்ப அறிவும் இருத்தல் வேண்டும். மோட்டார் பஸ், மோட்டார் கோச்சுகள், 'A' தர பார வாகனங்கள் ஓட்டுவது சம்பந்தமாக (பார வாகனங்கள் ஓட்டுவதற்காக) மோட்டார் வாகன ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் இணைக்கவும்).

6. **ஆட்சேர்ப்பு முறை.-** மேற்கூறப்பட்ட 4 ஆம், 5 ஆம் பிரிவுகளின்படி தகுதியானவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்கள்/ அனுமதிப்பத்திரம்/ மோட்டார் தொழில்நுட்ப அறிவு சம்பந்தமான பரீட்சைகளும் நடத்தப்படும். தகுதியானவர் செய்முறை பரீட்சையிலும் சமுகமளித்தல் வேண்டும். செய்முறை பரீட்சையிலும் தகைமை பெற்றவர்கள் சம்பந்தமாக பொலிஸ் அறிக்கையும், மதுவரி பகுதி அறிக்கையும் பெறப்பட்ட பின்பு தற்போதுள்ள, பதவி வெற்றிடத்திற்கு அமைய வகுப்பு II இன் மோட்டார் வாகன மதுவரி சாரதியாக நியமிக்கப்படுவதற்கு தெரிவு செய்யப்படுவர். நியமிப்பு சம்பந்தமான அரச கொள்கையும் ஒழுங்குவிதிகளும் நடைமுறைப்படுத்தப்படும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் திணைக்கள கடமைகள் சம்பந்தமாக வதிவிட பயிற்சிகள் அளிக்கப்படும்.

7. **சேவை நியமிப்பு செய்யும் ஒழுங்குகள்.-** இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியம் பெறுவதற்குரித்தானது. விதவைகள், அனாதைகளுக்கான ஓய்வூதியம் சம்பளத்திற்காக பங்குகள் கழிக்கப்படும். இப்பதவியானது மதுவரி திணைக்களத்தின் கட்டளைகளின் கீழ் நிர்வகிக்கப்படுவதுடன் சீருடை அணியும் பதவியும் ஆகும்.

8. விண்ணப்பதாரர் பின்வரும் சான்றுகளின் பிரதிகளை (மூலப்பிரதி அல்ல) விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்:-

(i) பிறப்பு சான்றிதழ் ;
(ii) நனனடத்தை சம்பந்தமாக அண்மையில் பெறப்பட்ட சான்றிதழ்கள் இரண்டு (2). இதில் ஒன்று நீர் நிரந்தரமாக வசிக்கும் பிரதேச கிராம சேவையாளரின் சிபாரிசுடன் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;
(iii) கல்வி தகைமைகளை நிரூபிக்கும் சான்றுகள் ;
(iv) மோட்டார் வாகனம் ஓட்டுதல் சம்பந்தமாக மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி சான்றிதழ் ;
(v) விசேட தகைமைகளை நிரூபிக்குமுகமான சான்றுகள்.

9. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும் இதற்காக எதுவித போக்குவரத்து செலவுகள் வழங்கப்படமாட்டாது.

டீ. ஜீ. எம். வி. கபுஆரச்சி,
மதுவரி ஆணையாளர்.

2008, யுலை 7

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை மதுவரி திணைக்களம்**
**மோட்டார் வாகன மதுவரி சாரதி - வகுப்பு II பதவி**

1. (அ) முழுப்பெயர் :-----
(ஆ) முதல் எழுத்துடன் பெயர் :-----

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----

3. தற்போதைய முகவரி :-
(அ) நிரந்தர வதிவிட முகவரி :-----
(ஆ) பொலிஸ் நிலையம் :-----

4. நீர் இலங்கை பிரஜையா, பதியப்பட்ட பிரஜையா ? (பதியப்பட்ட பிரஜையாயின் சான்றிதழின் பிரதி இணைக்கவும்) :-----

5. திருமணமானரா/ திருமணமாகாதவரா? :-----

6. பிறப்பு திகதி :-
ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----

7. வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கோரப்பட்ட திகதியில் வயது :-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

8. கல்வித் தகமைகள் (சித்தியடைந்த பரீட்சையும், அதற்கான சான்றிதலும் பிரதி இணைக்கவும்) :-----

9. (i) வர்த்தமானியின் 5ஆம் பகுதியில் (iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட படி சேவை அனுபவம் சம்பந்தமாக விபரம் தரவும் :-----
(ii) வர்த்தமானியின் 5 ஆம் பகுதியில் (vii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவை தொடர்பான விபரம் தரவும் (சான்றிதழ் களின் பிரதிகள் இணைக்கவும்.)

10. விண்ணப்பதாரர் பற்றி அறிந்து கொள்வதற்கு, இரு சாட்சிகளின் பெயர்கள், பதவிகள், முகவரிகள் தரவும் :-

(i) -----
(ii) -----

11. நீர் இதற்குமுன் அரச/மாகாண சேவையில் ஏதாவது பதவியில் அமர்த்தப்பட்டிருப்பின் விபரம் தரவும் :-----

அப்பதவியை விட்டு விலகி இருப்பின் அதற்கான காரணம் தரவும் :-----

12. தற்போதைய பதவியும் சேவை செய்யும் இடமும்/நிலையமும் :-----

இங்கு என்னால் தரப்பட்ட விபரங்கள் எனது அறிவிற்கும் விசுவாசத்திற்கும் எட்டியவரை பிழைகள் அற்றவை என ஒப்புதல் அளிக்கிறேன். இதில் ஏதாவது விபரங்கள் பிழையானதெனவோ, உண்மைக்கு புறம்பானதெனவோ, பின்பு கண்டறியப்பட்டால் நான் சேவையில் இருந்து நீக்கப்படவும் எதுவித கொடுப்பனவுகளும் இன்றி சேவையில் இருந்து நிறுத்தப்படுதற்கும் ஆளாவேன் எனவும் அறிவேன்.

........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----

8 - 29

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை 2008, திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என்பதனை இத்தால் அறியத்தருகிறேன்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1225/32 கொண்டதும் 2002.03.01 ஆந் திகதியையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. வசதிக்காக அப்பாடவிதானங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

**பரீட்சை ஒழுங்கு முறைகள் :**

(அ) I ஆவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் :

பாட இலக்கம் 001 : பொது நிர்வாகம் - இலங்கை அரசியல் யாப்பு, தாபன விதிக்கோவை, அரசாங்கத்தின் வேறும் சட்ட திட்டங்கள்
பாட இலக்கம் 002 : நிதி
பாட இலக்கம் 003 : கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை.

(ஆ) உத்தியோகத்தர் ஒருவர் I ஆவது வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரு தடவையேனும் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்றியிருக்க முடியும்.

(இ) சகல வினாப்பத்திரமும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டது.

**பாடத்திட்டம்**

(i) பொது நிர்வாகம் :

(அ) இலங்கை (அரசியல் யாப்பும்), அரசவைக் கட்டளை, 1946, 1947 (பாகம் 379),
1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம் (பாகம் 349)
1972 ஆம் ஆண்டின் மே 22 இல் விதித்து, சட்டமாக்கப்பட்ட யாப்பு,
1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவுசெய்யும் சட்டம்,
1981 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்,
1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கருத்துக் கணிப்பீட்டுச் சட்டம்,
1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான சட்டம்,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு.

(ஆ) அலுவலக வெளிக்கள அமைப்பு முறைகளும், தாபனவிதிக் கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அரசின் ஏனைய சட்ட ஒழுங்குகள் - அத்தியாயங்கள் I, II, III, IV, V, VI, VII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII)

(ii) நிதி

(அ) அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் பகுதி (I) (X அத்தியாயம் நீக்கலாக)

(ஆ) நடப்பு ஆண்டுக்கான வருமான செலவின மதிப்பீடுகள்– உதாரணம் - அவற்றின் ஒழுங்கேற்பாடுகள், வருவாய்த் தலைப்புகள், நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்.

(இ) கல்வி அலுவலகங்களில் இடம் பெறும் குறித்த கணக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டங்களும் ஏனைய சட்டவாக்கங்களும்.

(iii) கல்வி, கல்விச் சட்டம் நிர்வாகமும் மேற்பார்வையும் :

(அ) கல்விச் சட்டம் பரீட்சார்த்திகள் பின்வரும் கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டங்களை அறிந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள்:

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்
* 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தக் கட்டளைச் சட்டம்
* 1951 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கத் திருத்தச் சட்டம்
* 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
* அரசாங்கப் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் கோவை
* 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகளும் பயிற்சிக் கல்லூரிகளும் (விசேட ஏற்பாட்டுத்) (திருத்தச்) சட்டம்.
* 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகளும் ஆசிரியர் கல்லூரிகளும் (மேலதிக ஏற்பாடு) சட்டம்.
* 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப் பெயர் திருத்தம் செய்தல்) சட்டம்.
* 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாச் சட்டம்.
* 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவிபெறும் பாடசாலைகளும் ஆசிரிய கல்லூரிகளும் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டம்.
* 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்.

(ஆ) கல்வி நிருவாகம் :-

(1) கல்வி அமைச்சின் கொள்கைகள் :

(i) கல்வி அமைச்சு
(ii) கல்வி அமைச்சு, மாவட்டக் கல்வித் திணைக் களங்கள் உட்பட அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் உட்பட அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் முகவர் தாபனங்கள் ஆகியவற்றின் அமைப்பும், இவற்றின் தொழிற் பாடுகளும்.
(iii) தேசிய பிரதேச மட்டங்களில் கல்வித் திட்ட மிடல், இலக்குகளும் நோக்கங்களும் முறைகள், (பாடசாலை நிலப்படம் வரைதல் உட்பட) அமுலாக்கல் ஆகியன.

(2) பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை சமூக உறவுகள்
(3) கல்வி முகாமைத்துவ தகவல் முறைமைகள்
(4) விசேட கல்விச் செயற்றிட்டங்கள்.

(இ) கல்வி சார்ந்த மேற்பார்வை :

* பாடசாலை மேற்பார்வையிடுவதற்கான திட்டமும் ஆசிரியர் நிறைவேற்றல்களை மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படும் அளவுகளும் கருவியும்.
* பாடசாலையில் தொடர்ந்து மதிப்பிடும் செயற்திட்டம்
* பாடசாலையில் சுயமதிப்பீட்டுச் செயற்திட்டம்
* மாவட்ட திணைக்களங்களும் கல்வி அமைச்சும் மேற்கொள்ளும் பாடசாலை மேற்பார்வை
* உள்வாரி மதிப்பீட்டை வெளிவாரிக்குழுக்கள் மூலம் செல்லுபடியாக்கல்.
(கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், கைநூல்கள், ஏனைய வெளியீடுகள் ஆகியவற்றைப் பரீட்சார்த்திகள் பூரணமாக அறிந்திருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்)

உசாத்துணை நூல்கள், வெளியீடுகள் :

* கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் தொடர்பான ஆசிய நிறுவகம் (1970)
* கல்வி நிர்வாகம் தொடர்பான புதிய முகாமைத்துவ கலைகள்
* கருத்தரங்கு ஒன்றின் அறிக்கை – புதுடில்லி
* பரி மற்றும் டை (1975) பாடசாலைச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் ரெம்பிள் சுமித் இலண்டன்
* புஷ் டி லட்டர் ஆர் குட் மற்றும் சி றிவர்ஸ் (1980) பாடசாலைகள்
* முகாமைத்துவ ஒழுங்கு முறைகள் காபர் மற்றும் ட்ரோ
* கலாநிதி கான் முஹய்தீன் ஷெரீப் 1983
* பாடசாலை நிர்வாகம் புதுடில்லி
* கல்வி அமைச்சின் இலங்கைக் கல்வி (1969)
* கல்வி மற்றும் கலாச்சார பணிகள் தொடர்பான அமைச்சின் நூற்றாண்டு வாசகத்தின் II ஆவது மற்றும் III ஆவது பிரிவு
* திறந்த பல்கலைக்கழகம், (1981 பாடசாலைகளின் கொள்கை அமுலாக்கல் ஒழுங்கமைப்பு மற்றும் தலைமைத்துவம்) (ஈ 323 பாடநெறியின் 4 ஆம் பகுதி) திறந்த பல்கலைக்கழக யூனிவர்சிற்றி பிறேஸ், இலண்டன், சிக்மன், மேட்டின் (1983) பாடசாலை மதிப்பீடு ஹைஸ்மன் கல்வி நூல் இலண்டன், கல்வி முயற்சி முகாமைத்துவ மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கை 1984.

4. சித்திக்காக ஒவ்வொரு பாடத்திலும் மொத்த புள்ளிகளில் 40% பரீட்சார்த்திகளினால் பெறப்பட வேண்டும்.

5. **பரீட்சையின் மொழி மூலம்**.- (i) பரீட்சார்த்திகள் அரசகரும மொழி அல்லது தேசிய மொழி ஆகியவற்றில் ஏதாவதொரு மொழி மூலம் பதிலளிக்க முடியும்.

(ii) பரீட்சார்த்தி அரச சேவையில் இணைந்துகொள்ள முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரசசேவைக்கு இணைந்துகொண்டவர்கள் தொடர்பாக அரச சேவைக்கு இணைவதற்கு தகைமைபெற்றுப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் பதிலளிக்க வேண்டும்.

6. பரீட்சார்த்திகள் தமக்கு உரித்தற்ற மொழி மூலம் தோற்றுவதாக தெரியவந்தால் அவரது பரீட்சார்த்தித் தன்மை இரத்தாகும்.

7. விண்ணப்பப்படிவங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட மாதிரிப் விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 அளவு கடதாசியில் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். (விண்ணப்பப்படிவத்தில் 1-6 வரையிலான பகுதியை முதலாவது பக்கத்திலும் எஞ்சியத்தை இரண்டாவது பக்கத்திலும் குறிப்பிடவும்.) சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயரை சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலமும் தமிழ் விண்ணப்பப்படித்தில் பரீட்சையின் பெயரை தமிழ்மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். விண்ணப்பப்படிவத்தில் இல. 1-6 வரையில் முதலாவது பக்கத்திலும் எஞ்சியதை இரண்டாவது பக்கத்திலும் A4 அளவு கடதாசியில் தயாரிக்க

வேண்டியதுடன் உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்ததாக என்பது குறித்து விண்ணப்பதாரி கவனிக்க வேண்டியதுடன் அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

8. பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படுவதுடன், பரீட்சையை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப் பட்டிருக்கும் சட்ட விதிகளை பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டும். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிக்கையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. விண்ணப்பப் படிவங்கள் 2008.09.01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பரீட்சை ஆணையாளர்'' க்குக் கிடைக்கக்கூடியவாறு திணைக்களத் தலைவர் ஊடாக, பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

10. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கு 7 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் அவர் அது குறித்து தாமதமின்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்கள ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும் (தொலைமடல் மூலம் அனுப்பப்படவேண்டிய முகவரி : பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை என்ற விலாசத்திற்காகும்) அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகவல்களையும் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 02 அல்லது 03 நாட்கள் கழிந்தபின்னர் விண்ணப்பப்பத்திரம் கிடைக்காதோர் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதி செய்த போட்டோப் பிரதியையும் பதிவு செய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பப் படிவம் தபாலிட்ட திகதி, பதிவுத் தபால் இலக்கம், தபாலகத்தின் பெயர் ;
அண்மையில் இருப்போர் அறிவித்தல் மூலம் ''பரீட்சை ஆணையாளர் நாயகம் (இ) கட்டிடம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை''க்கு அறிவிக்கவும்.

11. மேற்கூறப்பட்ட 9 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில் விண்ணப்பதாரிகளினால் பின்னர் அறிவிக்கப்படும் எந்த முறைப் பாடுகள் சம்பந்தமாகவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

12. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிசெய்வ தற்கான சான்றுகளை சமர்ப்பிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். அதற்கென ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியாகக்கூடிய வெளிநாட்டு கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடமிந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் பரீட்சைக் கட்டணங்கள் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

(அ) முதல் தடவை (முழுமையான பரீட்சைக்கு அல்லது பகுதிக்கானது) கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்குமாக

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக் கட்டணம் | ரூ. 225.00 |
| ஒரு பாடத்திற்கு | ரூ. 75.00 |

14. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருத முடியாது.

பரீட்சார்த்திகளினால் ஒப்பமிட்டு உரியவாறு ரத்துச் செய்யப்படும் வருமான முத்திரை மூலம் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

எம். எம். என். டீ. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2008.07.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் III வது வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது தடைதாண்டல் பரீட்சை**

(First Efficiency Bar Examination for Officers in Class III of the Sri Lanka Educational Administrative Service)

*(பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளருக்கு திணைக்கள பொறுப்பாளர் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.)*

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடுக.)

*(பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்).*

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் எழுதப்பட்டதாக முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
(உ-ம் : Silva, S. A.)

(ஆ) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2. முகவரி :-
   (i) அலுவலக முகவரி :-----.
   (ii) சொந்த முகவரி :-----.
   (iii) பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

3. அறிவித்தலின் 2 ஆவது பந்தியின் (அ) இன் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள பாட இலக்கங்களுடன் எடுக்கவிருக்கும் பாடங்களை கீழே தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :

| | | |
|---|---|---|
| பாட இலக்கம் :- | ☐☐☐ | பாடம் :-----. |
| பாட இலக்கம் :- | ☐☐☐ | பாடம் :-----. |
| பாட இலக்கம் :- | ☐☐☐ | பாடம் :-----. |

4. தேசிய ஆளடையாள அட்டையின் இல.:- ☐☐☐☐☐☐☐☐☐☐

5. பிறந்த திகதி :-
   ஆண்டு:----. மாதம்:----. திகதி:----.

6. (i) பதவிப் பெயர் :-----.
   (ii) திணைக்களம்/ வலயக் கல்வி காரியாலயம்/ கோட்டம்/ பாடசாலை/ கல்வி அலுவலகம் :-----.

7. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது ஒரு பகுதிக்கு தோற்றியிருப்பின் தோற்றிய வருடம், பாடம் மற்றும் மொழி மூலத்தைக் குறிப்பிடுக.

| ஆண்டு | பாடம் | மொழி |
|---|---|---|
| ........... | .............. | ............... |
| ........... | .............. | ............... |
| ........... | ............. | ............... |

8. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அறிவித்தலின் 06 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும், பரீட்சை சம்பந்தமான சகல சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்படுவதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

9. செலுத்திய பரீட்சைக் கட்டணம் :

| |
|---|
| (முத்திரையை இங்கே ஒட்டி அதன் மேல் தங்கள் ஒப்பத்தை இட்டு இரத்துச் செய்யவும்) |

...............................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

பரீட்சை ஆணையாளர் நாயகம்

சமர்ப்பிக்கின்றேன்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உடையவர் என்றும், இவ் அறிவித்தலின் 6 ஆவது பந்தியில் அவர் குறிப்பிட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற அவருக்குத் தகைமையுண்டு எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தி முத்திரையின் மேல் ஒப்பமிட்டு அதனை இரத்துச் செய்துள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்*.

.............................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :-----.

* கட்டணம் செலுத்தும்போது நீக்கிவிடவும்.

8-57

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

**12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

**13. 1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்;ர் | வெளியூர் |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் IV பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 3,360.00 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | அஞ்சற் செலவு (உள்;ர்) |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| (அ) I வது பகுதி | 31.00 | 5.00 |
| II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) I வது பிரிவு | 10.00 | 5.00 |
| II வது பிரிவு | 12.00 | 5.00 |
| III வது பிரிவு | 9.00 | 5.00 |

***இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.***

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2008**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒகத்து** | .. | வெள்ளி | 01.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2008 |
| | | வெள்ளி | 08.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2008 |
| | | வெள்ளி | 15.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2008 |
| | | வெள்ளி | 22.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.08.2008 |
| | | வெள்ளி | 29.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2008 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 05.09.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2008 |
| | | வெள்ளி | 12.09.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2008 |
| | | வெள்ளி | 19.09.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.09.2008 |
| | | வெள்ளி | 26.09.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2008 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2008 |
| | | வெள்ளி | 10.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2008 |
| | | வெள்ளி | 17.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2008 |
| | | வெள்ளி | 24.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2008 |
| | | வெள்ளி | 31.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*